வாழ்க்கைக்கு நலம் தரு

# நியூமராலஜி

1 2 3 4 5 6 7 8 9

ஜோஸ்யர்
ஸச்சி

# Numerology

JPL
C1751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

[illegible]
கோப்பாய் ந. [illegible] மயில்வாகனம்
அன்பளிப்பு

KOHA
JPL

1751 269

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003
84688

# வாழ்க்கைக்கு நலம் தரும்

# நியுமராலஜி

## (Based on Cheiro's Analysis)

கோப்பாய் ந.இ.மயில்வாகனம்

ஜோஸ்யர் ஸச்சி

கோப்பாய் ந.இ.மயில்வாகனம்
அன்பளிப்பு

டேவிட் லிகோரி
பதிப்பாலயம்

KOHA
JPL
84688 C.C
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VAALKAIKU NALAM THARUM

# NUMEROLOGY

# A BOOK ON NUMEROLOGY

by

**JOSIAR SACHCHI**

FIRST EDITON; JUNE 1987.

133·335
ஸச்சி

Price : 6-50

Stockists in the City

**Poobalasingham Book Depot**
Jaffna. T. P. 23631

Published by:
DAVID LIGORY PATHIPPALAYAM.
38, VEMBADI ROAD, JAFFNA.

Printed at,
M/S aR eS PRINTERS
40/1, Navalar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நூல் நிலையத்திற்கு
கோப்பாய் ந.இ. மயில்வாகனம்
அன்பளிப்பு

# முன்னுரை

மனிதர்களுடைய குணதிசயங்களையும் செயல்களையும், வெற்றி தோல்விகளையும் தாங்களே அறிந்து. இன்புறுவதற்கு மட்டுமல்ல, தீமைகளை அறிந்து மனம் வெதும்பாமலும் இருப்பதற்கு. அற்புதமாக உதவி அளிக்க கூடியது எண் சாஸ்திரம்.

இதனையே ஆங்கிலத்தில் நியுமராலஜி என்று சொல்லப்படுகிறது.

காலத்தின் மாறுதநியதியை அடிப்படையாகக் கொண்ட கலையாதலால் இது நல்லவர் கெட்டவர் என்ற பேதமின்றி சரியானபடி முயற்சிக்கும் எவருக்கும் காரிய சித்தியைத் தரக்கூடியது' என்கிறார் எண் ஜோதிட மேதை பண்டிட் சேதுராமன்.

சோதிடக் கலையில் எண்கணிதம் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. வாழ்க்கையில் எண்ணின் உதவியில்லாமல் எந்தக்காரியமும் நடைபெறமுடியாது. உலகில் எந்த நாட்டிலும் அடிப்படை எண்கள் ஒன்றே.

எனவேதான் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்கிறார்கள்.

84688

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் எண் சாஸ்திரத்தைப்பற்றி (Science of Numbers) நம்மவருக்கு ஒன்றுமே தெரியாது.

எண்களுக்கு வாழ்க்கையில் உள்ள பங்கினைப் பற்றி எண்ணிப்பார்த்ததும் கிடையாது.

இன்று நிலைமை மாறிவிட்டது. எல்லோரும் எண்கள் பற்றி அறியத் துடிக்கிறார்கள்.

எண்களுக்கும் வாழ்க்கைக்குமுள்ள தொடர்பை அறியத் தொடங்கி விட்டார்கள்.

எண்களுக்கும் எழுதப்படுகிற எழுத்துக்குமுள்ள தொடர்பை உணர்கிறார்கள்.

உணவின் தேவையை உணர்வதுபோல் எண்கள் மூலம் நாம் பெறுகின்ற ஜீவ தாதுக்கள் நிறைந்த வாழ்க்கை வழிமுறைகளையும் அறியத்துடிக்கிறார்கள். வினைப்பயனால் தாம் அல்லல்படப் பிறந்தாலும், எண்களின் துணைகொண்டு அவற்றிலிருந்து விடுதலை பெற்று சுகம்காண துடிக்கிறார்கள். ஜாதிகள், இனங்கள், மதங்கள் இவை அனைத்தையும் கடந்து நிற்பவை எண்கள். எல்லாவற்றையும் தாண்டி அனைவருக்கும் பயன்தருபவை எண்களே. எனவேதான் இந்நூல் உங்கள் வாழ்க்கைக்கு நலம்தருமென முழுமையாக நம்புகிறேன்

222/6, கே. கே. எஸ். வீதி, ஐயா, சச்சிதானந்தம்.
யாழ்ப்பாணம்.
01-06-87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சோதிடக் கலையின் ஒரு கூறாகிய எண்சோதிடம் இன்று பலரது கவனத்தையும் பெற்றுவரும் ஒரு தனித் துறையாகப் பரிணமித்துள்ளது இத்துறை பற்றிப் பல வகையான நூல்கள் அண்மைக்காலத்தில் எழுதப் பட்டு வருகின்றன. இந் நூல்களின் வரிசையிலே இப் பொழுது வெளிவரும் இந் நூல் எண் சோதிடத்தைச் சாதாரண சராசரி மனிதனும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமைப் படுத்திய ஒரு முயற்சியாகும்.

இந் நூலாசிரியரான 'ஜோஸ்யர் ஸச்சி' அவர்கள் இலங்கைச் சோதிட ஆய்வுமன்றத்தின் துணைச் செய லாளர் 'ஜோஸ்யர்' பத்திரிகையை வெற்றிகரமாகத் தொடர்ந்து வெளியிட்டு வருபவர். இவர் சோதிடத் துறையில் சிறப்பாக எண் சோதிடத் துறையில் கொண்டிருந்த நீண்டகால ஈடுபாட்டின் விளைவாக மலரும் இந்நூல் எண்சோதிட அறிவை நாடுபவர்க் கும் அதனை ஒரு பயன் கலையாகப் பயில விரும்பு வோர்க்கும் பயன் தரவல்லது.

கலாநிதி நா, சுப்பிரமணிய ஐயர்,
(தலைவர், இலங்கை சோதிட ஆய்வு மன்றம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
தமிழ்த்துறைப் பீடம்,
இலங்கை,
1987-05-16.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

வலது காலை எடுத்து வைக்கிறோம்......

சமீபத்தில் என்னைப் பார்க்க எனது நண்பர் வந்திருந்தார்: வங்கியில் தொழில்செய்பவர் எழுத்தாளரும் கூட பல விஷயங்களுக்கு மத்தியில் நான் வெளியிடும் "தேனிசை மழை" மாத இதழ் பற்றியும் பேச்சு வந்தது. என்ன உங்கள் இதழ் சினிமா கீதங்களாகத் தான் இருக்கிறதே! என்றார்.

ஈழத்தில் தான் நிறைய எழுத்தாளர்கள் இருக்கிறார்களே குறுநாவல், கட்டுரைத் தொகுதி, சிறுகதை தொகுதி. சிறுவர் நூல்கள் என்று அவர்களின் ஆக்கங்களை வாங்கி வெளியிட முடியாதா என்றார்.

அவர் வந்தபோது காலை நேரம்; அயலில் இருக்கும் அடைக்கலமாதா ஆலயத்தின் திருவிழாக் காலம் விழாக்கால மணியோசை கணீரென்று ஒலித்துக் கொண்டிருந்தது எனது வீட்டிற்கு அருகிலுள்ள வீடு இந்து சமயத்தைச் சார்ந்தவர்களுடைய வீடு. அங்கு "சுப்ரபாதம்" கேட்டுக்கொண்டிருந்தது.

அப்பொழுதே மனதுக்குள் நினைத்துக் கொண்டேன் ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களை வாங்கி வெளியிடுவதென்று.

முயற்சிகளுக்கே நாம் பொறுப்பாளிகள் விளைவுகள் நம் கையில் இல்லை என்பது கீதை காட்டும் போதனை. அந்த விளைவுகள் நன்மை பயப்பனவாக வேண்டும் என்பது மனிதனின் நம்பிக்கை, அந்த நம்பிக்கையில் இந்த புதிய முயற்சியில் "வலது காலை எடுத்து வைக்கிறோம்".

"வலது காலை எடுத்து வைக்கிறோம்" என்று சொல்லும் போது அதன் மங்கலம் உங்கள் மனதில் மணக்குமே! ஆம்; நாம் எத்தனையோ முறை கடந்து செல்கின்ற வாசற்படிதான் என்றாலும் சில குறிப்பிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நிகழ்ச்சிகள் நடைபெறும் வேளைகளில் தான் "வலது காலை எடுத்து வை" என்ற சொல்லை உபயோகிக்கிறோம்.

பதினைந்து வருடங்களுக்கு நெருக்கமாக பத்திரிகை புத்தக உலகத்தையே என் வாழ்க்கைக்காக நம்பி இந்த உலகில் ஏதோ ஓரளவு செய்து கொண்டிருக்கும் நான் இந்த புதிய முயற்சியில் பிரவேசிப்பதும் அப்படியோர் தனிச்சிறப்பான விஷயமாகத்தான் அமைகிறது

முதல் வெளியீடாக எண் சோதிட இதழ் 'ஜோஸ்யர்" ஆசிரியர் ஐயா சச்சிதானந்தம் அவர்கள் எழுதியுள்ள "வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி" என்னும் இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

இந்நூல் ஈழத்தில் இதுவரை வெளிவந்த நியுமராலஜி நூல்களைவிட வித்தியாசமான பார்வையுடையது இளையதலைமுறையினரும் இந்நூலை படிப்பதற்கு எளிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

இரண்டாவது வெளியீடாக குடும்பத்தில் உள்ள பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் மூன்று பிரிவினருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் விதமாக புதிய நாவல் வெளிவருகிறது..

இந்நூலை எழுதித் தந்த இந்நூல் ஆசிரியருக்கும், அட்டையை வரைந்து உதவிய ஓவியர் "வரன் ஆட்ஸ்" அவர்களுக்கும் அட்டையை அச்சிடுவதற்கான சாதனங்களை செய்துதந்த கலைஞர் ஆனந்தன் அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு தந்த ஆர் எஸ் அச்சக உரிமையாளர் அவர்களுக்கும், ஊழியர்கள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

38. வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.
01—06—1987.

டேவிட் கிறேகொரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| | அணிந்துரை | |
| | பதிப்புரை | |
| 01 | எண்களின் தோற்றம் | 01 |
| 02 | எண்களின் வகைகள் | 02 |
| 03 | எண்களும் கிரகங்களும் | 05 |
| 04 | எண்களின் செயல்பாடு | 07 |
| 05 | எண்ணிலே வாழ்வு | 08 |
| 06 | எண்ணிலே திகதி | 10 |
| 07 | எண்ணிலே பெயர் | 13 |
| 08 | எண்ணிலே திருமணம் | 22 |
| 09 | எண்ணிலே அதிஷ்டம் | 23 |
| 10 | எண்ணிலே நாளும் கோளும் | 24 |
| 11 | எண்ணிலே தொழில்கள் | 26 |
| 12 | எண்ணிலே நண்பர் | 27 |
| 13 | எண்ணிலே வியாதி | 28 |
| 14 | எண்ணிலே பரிகாரம் | 29 |
| 15 | 31 திகதிகளில் பிறந்தவர்களுக்கு தனித்தனியான பலன்கள் | 30 |
| 16 | பெண்களைப் பற்றி எண்கள் | 34 |
| 17 | அதிஷ்ட மாதங்கள் | 37 |
| 18 | அவசியமான குறிப்புகள் | 37 |
| 19 | தெய்வீக வாழ்வில் எண்கள் | 38 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் ந.இ.மயில்வாகனம்

# 1 எண்களின் தோற்றம்

எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்.

எண்களே கண்கள்......

எண்ணெழுத் திகழேல்......

இவையெல்லாம் முதுமொழிகள்

வாழ்க்கைக்கு எண்ணுக்கும் எழுத்துக்கும் எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதென்பதை இவை தெளிவு படுத்துகின்றன.

கண்கள் என்னும் சாரளங்களால் நாம் வெளியுலகை, முழுமையாக பார்ப்பது போலவே அறிவுக்கண் என்னும் தீர்க்கதரிசனம் கொண்டு உலகியல் விஷயங்களை அறிவதற்கு எண்ணும் எழுத்தும் கண்போல விளங்குகின்றன.

இதனால் தான் வாழ்க்கைக்கும், எண்களுக்கும் எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்கிறோம்.

எண் என்ற சொல்லுக்கும் எழுத்து என்னும் சொல்லுக்கும் ஜோதிட ரீதியில் கூறப்படும் பொருள் விசேடமானதாகும்.

பூஜ்யத்தை தவிர்த்துவிட்டு மொத்தம் ஒன்பது எண்கள். இந்த ஒன்பது எண்களில்தான் கோடானுகோடி ஜீவராசிகள் இயங்குகின்றன. ஒன்பது கிரகங்களும் ஒன்பது எண்களின் பிரதிநிதிகள்

எண்வடிவத்திலும் எழுத்து வடிவத்திலும் இரண்டிலும் ஒன்று சேர்ந்து நம்மை ஆளுகின்ற நவக்கிரகங்களைப் பற்றி இருவகையிலும் ஆராய்ந்து முடிவெடுப்பதே அஸ்ட்ரோ நியுமராலஜி ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்துறையில் எண்ணும் எழுத்தும் கண் போலவே வாழ்வுக்கும் இந்த இரண்டும் கண் எனத் தரும் சிறப்புடையது.

இந்த எண்கள் பற்றி பலரும் பலநிலைகளில் ஆராய்ந்திருக்கிறார்கள். இந்த ஆய்வுகள் கீழைத்தேய நாடுகளில் மட்டுமல்ல, எகிப்து, மெசபடோமியா போன்ற நாடுகளிலும் வழக்கில் இருந்து வந்துள்ளன. எண்களைப்பற்றி நவீனகாலத்தில் ஷீரோவின் நடைமுறைகளே பின்பற்றப்படுகின்றன. அந்தமுறைதான் இன்று மறுமலர்ச்சி பெற்றிருக்கின்றது. "ஷீரோ" வின் நிருபணங்கள் ஆரம்பத்தில் எதிர்ப்புக்களுக்கு ஆன போதும், காலப்போக்கில், உலகம் முழுவதும் "எண் கணிதக்கலை பரவத் தொடங்கியது. இது இறுதியில், சால்டியன் முறையால் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது இக்கலை, நூறு மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். தமிழில்கூட இக்கலை தோற்றுவிக்கப்பட்டாலும், ஆங்கில மொழியான எண் கலை பிரபலமானது.

# 2 எண்களின் வகைகள்

சீரோ வெளியிட்ட நியூமராலஜிக் கலையில் சிற்சில குறைபாடுகள் இருப்பதைக் கண்டு அவைகளைப் போக்கும் வகையில், பிற்கால அறிஞர்கள் பல புதிய முறைகளைப் புகுத்தினர். அதன்பிறகு இக்கலை பூரணபலத்துடன் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.

நமக்குத் தெரிகின்றவகையில் நான்கு அறிஞர்கள் இக்கலையைப் பூரணப்படுத்தினலும், சால்டியன் முறை பிரபல்யமானது. இவை, ஹீப்ரு முறை, அரேபிய முறை, பிதாகரஸ் முறை, சால்டியன் முறை ஆகியன வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹீப்ரு முறையில் உள்ள ஒவ்வொரு அட்சரத்திற்கும் உள்ள மதிப்பெண் அதிஷ்ட நிறம் போன்றவைகளையும் பற்றி இங்கு தரப்படுகிறது.

| முதல் அட்சர எழுத்துகள் | அதிஷ்ட எண்கள் | அதிஷ்ட நிறம் |
|---|---|---|
| A I J Q Y | ஒன்று | ஒரெஞ்சு |
| B C K R | இரண்டு | வெள்ளை |
| G L S | மூன்று | மஞ்சள் |
| D M T | நான்கு | வாடாமல்லி |
| E N | ஐந்து | சாம்பல் |
| U V W X | ஆறு | வெளிர் ஊதா |
| O Z | ஏழு | பச்சை |
| F P H | எட்டு | ஆழ்ந்த ஊதா |

இம்முறை நாட்டில் பிரபல்யம் அடையவில்லை. அரேபிய முறையில் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கும் உள்ள மதிப்பெண் கீழே தரப்படுகின்றது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A - | 01 | I - | 10 | Q - | 20 | Y - | 10 |
| B - | 02 | J - | 03 | R - | 200 | Z - | 800 |
| C - | 60 | K - | 20 | S - | 60 | | |
| D - | 04 | L - | 30 | T - | 400 | | |
| E - | 05 | M - | 40 | U - | 06 | | |
| F - | 08 | N - | 50 | V - | 80 | | |
| G - | 03 | O - | 06 | W - | 06 | | |
| H - | 05 | P - | 80 | X - | 110 | | |

இம்முறையும் பிரபல்யம் அடையவில்லை.

கணித சாஸ்திரத்தில் பலபுதுமைகளைச் செய்து காட்டிய பிதாகரஸ் எண் ஜோதிடக் கலையாலும் தமது திறமையைக் காட்டியுள்ளார். அவரது எண்ணுக்கான மதிப்பைத் தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| A, J, S, | — 01 | F, O, X, | —06 |
| B, K, T, | — 02 | G, P, X, | — 07 |
| C, L, U, | — 03 | Q, H, Z, | — 08 |
| D, M. V, | — 04 | I, R, | — 09 |
| E, N, W, | — 05 | | |

இதுவும் எண்ஜோதிடத்தில் பிரபல்யம் அடைய வில்லை.

சால்டியன் முறையில் A முதல் Z வரையில் உள்ள 26 ஆங்கில எழுத்துக்களுக்கும் சால்டியன் முறையில் வழங்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| A, I, J, Q, Y, | — 01 | E, H, X, N, | — 05 |
| B, K, R, | — 02 | U, V, W, | — 06 |
| C, G, L, S. | — 03 | O, Z, | — 07 |
| D, M, T, | — 04 | F, P, | — 8 |

இந்த முறைதான் தற்சமயம் நமது நாட்டில் நடைமுறையில் இருந்து வருகின்றது. இம்முறையில் எட்டு எண்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் ஒன்பது எண் பயன்படுத்தவில்லை. இதற்குக் காரணம் ஒன்பது தெய்வீக எண். இதனைத் தெய்வீக எண்ணாக கருதி இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

சால்டியன் முறையில் பெயர் எழுத்துக்களுக்கான மதிப்பெண்களைக் கண்டுபிடிக்க பெயருடன் கூடிய பெயரெழுத்துக்கான மதிப்பெண்ணையும் கணக்கில் கொள்ள வேண்டும். அத்தனைக்கும் சப்த ஒலியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 எண்களும் கிரகங்களும்.

சூரிய குடும்பத்தில் ஒன்பது கிரகங்களே இருக்கின்றன. எல்லாகணிதங்களும் ஒன்றிலிருந்து ஒன்பது வரை உள்ள எண்களை ஆதாரமாகக் கொண்டே அமைகின்றன. நாம் அறிந்து கொள்ளப் போகும் எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகியவையாகும். இந்த எண்கள் நம்முடைய வாழ்க்கையை கட்டுப்படுத்தும் ஒன்பது கிரகங்களுக்குச் சொந்தமானவையாகும்.

எண்களுக்குள்ள ஆற்றல் அதிர்வுகளின் விதியை (LAW OF VIBRATION) ஆதாரமாகக் கொண்டதாகும். நீங்கள் ஒரு தேதியில் பிறக்கிறீர்கள். அந்தத் தேதியின் ஆதார எண் எதுவோ அந்த எண்ணுக்குரிய கிரகத்தின் அதிர்வுகள் வாழ்க்கை பூராகவும் பாதிக்கிறது.

நீங்கள் பிறந்த தேதியில் ஆதார எண் உங்கள் பெயரின் ஆதார எண்ணோடு இணைந்ததாக இருக்குமாகில் அதிர்வுகள் ஒன்றுக்கொன்று இணைந்து உங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குகிறது. அவ்வாறு ஒத்துப்போகாது இருக்குமானால் வாழ்க்கையில் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

வானில் வலம் வந்து கொண்டிருக்கும் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆதிபத்தியமுடைய மதிப்பெண் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிரகம் | ஆதிக்க எண் | உரிய நிறங்கள் |
|---|---|---|
| சூரியன் | எண் ஒன்று | வெளிர் நீலம்<br>இளஞ் சிவப்பு |
| சந்திரன் | எண் இரண்டு | வெண்மை |
| செவ்வாய் | எண் ஒன்பது | சிவப்பு |
| புதன் | எண் ஐந்து | பச்சை |
| குரு | எண் மூன்று | மஞ்சள் |
| சுக்கிரன் | எண் ஆறு | வெண்மை, சாம்பல் |
| சனி | எண் எட்டு | நீலம் - கறுப்பு |
| ராகு | எண் நாலு | கருநீலம் |
| கேது | எண் ஏழு | கருஞ்சிவப்பு |

எண்களை நேர்முறை எண்கள் என்றும் எதிர்முறை எண்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். நேர் முறை எண்களை எதிர்முறை எண்கள் ஆட்சி செய் கின்றன என்பது பொது விதி நேர்முறை எண்களை தீ என்றும் காற்று என்றும் இருபகுதியாக பிரித்துள் ளனர். எதிர்முறை எண்களை நீர் என்றும் மண் என் றும் இருபிரிவாகப் பிரித்துள்ளனர்.

| நேர்முறை எண்கள் | | எதிர்முறை எண்கள் | |
|---|---|---|---|
| தீ | காற்று | நீர் | மண் |
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | | | |

இரண்டு எண் ஒன்றை ஆட்சி செய்யும் ஆறு என்ற எண் ஐந்தை ஆட்சி செய்யும் ஒன்பது என்ற எண் 2 - 6 என்ற எண்களை ஆட்சி செய்யும் ஆகவே நேர்மறை எண்களான 1 – 2 – 5 – 6 ஒன்றையொன்று ஆட்சி செய்யும் நாலு என்ற எண் மூன்றை வெல் லும், எட்டு என்ற எண் ஏழை வெல்லும், ஒன்பது என்ற எண்ணை யாரும் வெல்ல முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 எண்களின் செயல்பாடு

ஒன்பது எண்களுக்கும் நட்பு எண்கள் சமஎண்கள் பகை எண்கள் என்பனவுண்டு இதனை ''நியுமரலாஜி'' கற்றுக் கொள்பவர்கள் மனப்பாடம் செய்வது அவசியமானது. இதில் எந்தத் தேதியில் பிறந்தவர்கட்கும், நன்மை செய்பவை. தீமை செய்பவை என்ற எண் பாகுபாடுகளை யூகிக்கலாம் நட்பு எண்களும் சம எண் களும் நன்மை செய்பவை பகை எண்கள் தீமை செய்பவை ஒரு திகதியில் பிறந்தவர்கள் தமது பெயர் எழுத்துக்களின் கூட்டுத் தொகையாக வரும் எண்ணை தமது பிறப்பு எண்ணுக்கு நட்பு (அ) சம எண்ணில் தான் நிர்ணயிக்கலாம் பகை எண்ணில் அமைந்தால் கெடுதிதான்.

| பிறந்த திகதி எண் | நட்பு எண்கள் | சம எண்கள் | பகை எண்கள் |
|---|---|---|---|
| 01 | 04 | 2,3,5,9 | 08 |
| 02 | 07 | 1,3,5,6,9 | 08 |
| 03 | 01, 09 | 2,4,8 | 06 |
| 04 | 01 | 3,5,6 | 08 |
| 05 | 01, 06 | 7,9 | 2,3,4,8 |
| 06 | 05, 90 | 4,7,8 | 03 |
| 07 | 01, 04 | 3.5,6 | 08 |
| 08 | 04 | 3,5,6 | 2, 7 |
| 09 | 03, 05 | 1,6,7 | 2, 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட பட்டியலைப் பயன்படுத்தி அவரவர்க்கு வேண்டிய வகையில் பிறப்பெண்ணுக்கு ஏற்றதுபோல பெயரெண்களை அமைத்துக் கொள்வது நல்லதுநட்பு எண்களிலே பெயர்கள் அமையவேண்டும் பிறப்பு எண்ணுக்கும் கூட்டு எண்ணுக்கும் ஒன்றுக்கொன்றுபகை யிருந்தாலும் பரவாயில்லை பிறபபெண்ணுக்கும் பெய ரெண்ணுக்கும் பரஸ்பரம் ஒற்றுமையிருக்கவேண்டும்.

## 5 எண்ணிலே வாழ்வு

உங்கள் வாழ்வைப் பிரதிபலிக்ககூடிய எண்கள் மூவகைப்படும். முதலாவது நீங்கள் பிறந்த தேதிஎண் இரண்டாவது பிறந்ததேதி, மாதம், வருஷம், இவற்றின் கூட்டெண் மூன்ருவது உங்கள் பெயரெண் இந்த மூன்று எண்களும் ஒரே எண்ணுக இருக்க வேண்டும் என்ற கட்டுபபாடு இல்லை. ஒரே எண்ணுக அமைந்தால் விஶேஷமு தான்.

பிறந்த தேதி எண்ணை மாற்றமுடியாது பிறந்த தேதி மாதம், வருஷம் இவற்றின் எண்ணையும் மாற்ற முடியாது.

அவை எம் விதிப்படி அமைந்தது. ஆனுல் ஒன்று செய்யமுடியும். அந்த விதியைப்புரிந்து கொண்டு நமது வாழ்வில் தெளிவு பெறுவதற்கு ஏற்ருல் போல் நம் மைத் திருத்திக்கொள்ளலாம். அதற்காக நாம் செய்ய வேண்டியது நமது பெயரை அதிஸ்டகரமாக மாற்று வதுதான்.

ஒருவர் பிறந்த தேதி எதுவானுலும் அதுவே பிறப்பெண். உதாரணமாக 01, 10, 19, 28ல் பிறந் தவர்களது பிறப்பெண் ஒன்று.

பிறந்தநாள் எண். பிறந்த மாத எண். பிறந்த வருட எண் ஆகிய மூன்றையும் கூட்டி வந்ததை விதி எண் என்கிரேம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஒருவர் 22-4-1957ல் பிறந்தார் என்றால் அவர் பிறந்த எண் 2+2=04 ஆகும். விதி எண் 2+2+04+1+9+5+7=30 ஆகும். பூஜ்யத்தை இந்த எண்ணின் கணக்கில் எடுப்பதில்லை. அதனால் அவருடைய பிறப்பெண் 03 ஆகும். இவருக்கு பிறப்பெண் 04 ஆகவும் விதியெண் 03 ஆகவும் அமைகின்றது இது விதி. இவரது உள்ளத்திண்மை உத்தியோகம், குடும்பச்சூழல் அன்றாட நிகழ்ச்சிகள் எல்லாம் பிறந்த எண்ணாகிய நான்கின் பலனாக அமைந்திருக்கும்

வாழ்க்கையில் சாதனை, வாழ்வில் நன்மை, தீமை, துக்கம், சந்தோஷம் எல்லாம் விதி எண்ணிலே அமைந்திருக்கும்.

பிறப்பு எண்ணோ கூட்டுஎண்ணோ (விதியெண்) எப்போதும் மாறாது என்று சொன்னேன், ஆனால் பெயர் எண் தேவைக்கு தக்கபடி மாற்றிக்கொள்ள இயலும். பெயர் எண் இயல்பிலேயே நல்ல முறையில் அமைந்திருப்பினும் நல்ல பலன்களை வழங்குவதனாலும் மாற்ற வேண்டியதில்லை ஆனால் பிறப்பு எண்ணும் விதி எண்ணும் பலமாக பகைப்பட்டு இருப்பினும் நடைமுறை வாழ்வில் தொடர்ந்து கஷ்ட நஷ்டங்களை வழங்குவதாலும் இப்படிப்பட்ட அமைப்புடைய பெயர் எண்ணை அவசியம் மாற்றவேண்டும். அப்படி மாற்றும் போது சிறந்த பலனை வழங்கும் எண்ணாகவும். பிறப்பு எண்ணுக்கும் விதியெண்ணுக்கும் மிகப் பொருத்தமுடைய ஏற்ற எண்ணாகவும் வரும்படி அமைத்துக் கொள்ளவேண்டும் இவை கணிதப்பிழையில்லாமலும், உச்சரிப்பு பிறவாமலும் இருக்கவேண்டும்.

உதாரணமாக ஒருவர் பிறந்த திகதி 04-10-1955 என்று இருக்குமானால் அவர் தமது பெயரை அமைக்கும் போது பிறப்பு எண் 4க்கும் கூட்டு எண் ஏழுக்கும் பொருத்தமுடையதாக இருக்கவேண்டும். இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1, 3, 4, 6, 7-ல் பெயர் எண் இருக்கலாம். 5, 9 பகை எண்ணுக அமைவதால் பெயரை அமைக்க கூடாது. இதன் அட்டவணை முன்னைய அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது இவரது பெயர் ராமன் ஆகும் தந்தையார் பெயர் ஸ்ரீனிவாசன். ஆனுல் இவர் S. RAMAN என கையெழுத்திட்டார். பலன் அதிக வாய்ப்பைத்தரவில்லை.

S, RAMAN
3 21415 = எனவந்தது

பெயரை மாற்றினுர்:

SRI. RAMAN
321 21415 = 19 = 10 = 01

இதுவே அதிஸ்டம் தந்தது எனவே, ஆராய்வதற்கும், யாரது உதவியும் தேவையில்லை, ஆய்வுகள் தான் முக்கியம்.

# 6 எண்ணிலே திகதி

1, 10, 19, 28, ந் திகதிகளில் பிறப்பவர்கள் அறிவு தீட்சண்யம், எதையும் எதிர்நோக்கிச்சென்று சமாளிக்கும் திறமை, எதிலும் ஆதாயத்தை எதிர் பார்க்கும் வேகம், வாக்குவன்மை இருக்கும். ஆனுல், வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை தவிர்ந்த நாட்களில் யோகசாலிகளாக விளங்குவர்.

2, 11, 20, 29, ந் திகதிகளில் பிறந்தவர்கள் காதல் கருணை, அன்பு போன்ற உள்ளம், எதிர் எதிரான பொருட்களில் கவர்ச்சி, தயாளமனம், சிந் திக்கும் தன்மை, நீதிதவருமை இருக்கும். இவர்கள் எந்தக்கிழமையாக இருந்தாலும் அதிஸ்டசாலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3, 12, 21, 30 ந்** திகதிகளில் பிறந்தவர்கள்' அறிவு, நிதானம், தீர்மானித்தல் பொருளாதார ரீதியில் எதையும் சிந்தித்து செயல்படும் தன்மை ஆதாயம் தேடும் குணம் இருக்கும். இவர்களில் புதன்கிழமை, வெள்ளிக்கிழமை தவிர்ந்த நாட்களில் பிறப்பின் யோகசாலிகள்.

**4, 13, 22, 31 ந்** திகதிகளில் பிறந்தவர்கள் அயராதஉழைப்பு, பொறுமை, கருமமே கண்ணுயினர், எதிர் பார்க்கும் பலனை அடைந்துவரும் தன்மை இருக்கும். இவர்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் கிழமை தவிர மற்றைய நாட்களில் பிறந்தால் அதிஸ்டமுள்ளவர்கள்.

**5, 14, 23 ந்** திகதிகளில் பிறந்தவர்கள் நிதான மான சிந்தனை, நேர்மை, இரக்கம், தியாக குணம், ஓரளவுக்கு வீரத்தை வெளிப்படுத்தும் குணம், எதிர் பாராத வெற்றியும் முடிவுகளைக் கண்டு மகிழ்தல் இருக்கும். திங்கட்கிழமை தவிர மற்றையநாளில் இவர் களுக்கு அதிஸ்ட முண்டு.

**6, 15, 24 ந்** திகதிகளில் பிறந்தவர்கள், அமைதி பதற்றமின்மை, போதுமென்ற மனத்திருப்தி, எதிராளி யை புரிந்துகொண்டு பேசுவார்கள், சமயத்தில் உதவு வார்கள், நன்மதிப்பைப் பெற விரைவார்கள், ஞாயிறு திங்கட்கிழமையை விட மற்றைய நாட்களில் 6, 15, 24ல் பிறப்பின் அதிஸ்டமுண்டு.

**7, 16, 25, ல்** பிறந்தவர்கள் அறிவு தீட்சன்யம், சாதனைமிகுந்த வாழ்க்கையாலும் பின்னர் பற்றை இழந்துவிடுவார்கள். சிறு துன்பத்துக்கும் மிரளுவார் கள். இவர்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் தவிர்ந்த நாளில் பிறந்திருப்பின் அதிஸ்டசாலிகள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8, 17, 26 ந் திகதி பிறந்தவர்கள், எதையும் எதிர்க்கும் சுபாவம், பிடிவாத குணம், உணர்ச்சிகளை அடக்கிக் குமுறும் சுபாவம், உயர்நிலை பெறுபவர்களும் இவர்கள்தான். ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமை கள் அல்லாத நாளில் பிறந்தால் அதிஸ்டம்தான்.

9, 18, 27 ம் திகதியில் பிறந்தவர்கள், மனோ தைரியம் மிக்கவர்கள் துணிச்சல்காரர்கள், அழுங்குப் பிடியிருக்கும், சபலபுத்தி மிக்கவர்கள். குணம் அற்ற வர்கள், திட்டம் போடுபவர்கள். இவர்கள் புதன் கிழமை தவிர மற்றநாளில் பிறப்பின் அதிஸ்டம்தான்,

உங்கள் பிறந்த நாளுக்கு ஒப்ப மாதத்தில் சில தேதிகள் உதவிகரமாக அமையவும், இம்மாதிரியான நாட்களில் முக்கிய காரியங்களில் ஈடுபட்டால் பூரண வெற்றி கிட்டாவிட்டாலும் தோல்வி கிட்டாது.

| பிறந்தநாள் | | சாதகமான திகதிகள் |
|---|---|---|
| 01, 10, 19. 28 | — | 01, 10, 19, 28. |
| 02, 11, 20, 29 | — | 02, 11, 20, 29. |
| 03, 12, 21, 30 | — | 03, 12, 21, 30. |
| 04, 13 22, 31 | — | 04 13, 22, 31. |
| 05, 14, 23 | — | 05, 14, 23. |
| 06, 15, 24 | — | 06, 15, 24. |
| 07, 16, 25 | — | 07, 16, 25. |
| 08, 17, 26 | — | 08, 17, 26. |
| 09, 18, 27 | — | 09, 18, 27. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 எண்ணிலே பெயர்

ஒவ்வொருவருக்கும் ஒரு பெயருண்டு. பெயரில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஓர் எண் உண்டு. விதியை மாற்றுவதானால் ஒன்றைமட்டும் செய்யலாம் விதியைப் புரிந்து கொண்டு அதன் கதியை உணர்ந்து கொண்டு நம் போக்கைத் தெளிவு செய்து கொள்ளலாம். அதற்கு நமது பெயரில் செய்யப்பட வேண் திருத்தம். எப்போதும் பெயரை திருத்தும் போது எமது பெயரின் கூட்டெண் எமக்கு நட்பு எண்ணாக அதிஸ்டம் தரும் எண்ணைக் கொண்டிருக்கவேண்டும். முன்னதாக இதை உதாரணங்கள் மூலம் விளக்கியுள்ளேன். இனி ஒவ்வொரு பெயரெண்ணுக்குமுள்ள பலன்களைப் பார்ப்போம்.

பெயரெண் 05 — இவ்வெண் எதிலும் வேகம் சுறு சுறுப்பு முன்யோசனை அறிவு - ஆற்றல் அனைத்தையும் அளிக்கவல்லது.

பெரெண் 06 — நல்ல அழகினையும் கலை உள்ளத்தையும் கவர்ச்சியாக வாழ வேண்டுமென்ற எண்ணத்தையும் தரவல்லது.

பெயரெண் 07 — இவ்வெண் பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் தொல்லைதரவல்லது நேர்மையான வாழ்வைத் தரும்.

பெயரெண் 08 — எட்டு எண் பெயர் சிலருக்கே அதிஸ்டம் தரவல்லது, ஆபத்தைத் தருமென பலரும் அஞ்சுகிறார்கள் துர்அதிஷ்டமிக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெண் 09 — முன் கோபத்தைத் தரும் முரட்டுத்தனம் தரும் நினைத்ததை முடிக்கும், இப்பெயரெண் உடையவருக்கு வயது ஏற ஏற அதிஸ்டமுண்டு

பெயரெண் 10 — ஏழ்மையில் பிறந்தாலும் அதிஸ்டம் தரும் பெயரெண் காதலுக்கு கைகொடுக்கும் விடா முயற்சியுடைய எண்

பெயரெண் 11 — கல்வியைக் குளப்பும், சபலபுத்தி தரும் முன்கோபம் உருவாகும், தீயபழக்கங்களை நாடும் தன்மை இருக்கும் அலைச்சலும் அவதியும் தரும் எண்.

பெயரெண் 12 — வாழ்வில் ஏதும் குறையைத் தரும். நோய் கொடுக்கும், சக்தி குறைந்த எண்ணும்.

பெயரெண் 13 — பகட்டான எண், அதிஷ்டம் கெட்டுவிடும். "ஓஹோ" என்று உயர்ந்தாலும் சரிவு தான்.

பெயரெண் 14 — நல்ல அதிஷ்டமும் கல்வி செல்வங்களைத் தரும். குடும்பவாழ்வு பூரிக்கும் பெரிய இடத்துச் சம்பந்தம் தேடிவரும், நட்பு மிகுந்தவர்களாக இருப்பர்.

பெயரெண் 15 — கலகலப்பான பேச்சும், சீரிய சிந்தனையும் தரும் பண்பானவர்கள். இவ்வெண் ஒரு போதும் பணத்தட்டுப்பாடு தராது.

பெயரெண் 16 — முற்பகுதியில் முழுநிலவாகவும் பிற்பகுதியில் பேரிருளாகவும் இருக்கும், கொடுத்துப் பறிக்கும் தன்மையுடையது.

பெயரெண் 17 — அதிஸ்டத்தை சிலருக்குத் தரும் அவலத்தையும் தரும். சபலம் மிகுந்தவர்களுக்கு சஞ்சலம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெண் 18 – நீரால், நெருப்பால் ஆபத்தைக் கொடுக்கும், எதிர்ப்பையும் சோதனையையும் தரும் எண் தெய்வீக எண்.

பெயரெண் 19 – சொர்கந்தான், அதிபதியாக திகழும் எண், செல்வம் தரும் தொழிலில் உயர்ச்சிதரும் அழிவில்லாத எண்.

பெயரெண் 20 — பாவத்தின் அடிப்படையான எண் வாழ்க்கை ஒரே போராட்டமாக இருக்கும் வம்பு வழக்குகளைத் தரும்.

பெயரெண் 21 தகுதி திறமை இருந்தும் முன்னேற முடியாத எண் சிலருக்கு அதிஷ்டம் தருகிறது அதிஷ்டமற்றது.

பெயரெண் 22 — வீண் எதிர்ப்பைத் தேடித்தரும் எண் நாவண்மையைத் தரும் ஏமாற்றம் தரும் எண்.

பெயரெண் 23 – சகலகலாவல்லமை பொருந்திய எண். நட்புக்கு இலக்கணம் தரும் எண், அதிஸ்டத்தின் அச்சாணி செல்வம் செல்வாக்குத் தரும் எண்.

பெயரெண் 24 – இளமையும் கவர்ச்சியும் தரும் எண். அயல்நாட்டுப் பயணத்தையும், அதிஸ்டத்தையும் தரும் எண். பெரும் பொருள் வருவாய் தரும் அதிஸ்டமிக்கது.

பெயரெண் 25 — தெய்வீக நம்பிக்கை தரும் எண்.வசதி வாய்ப்பு மிகுந்தாலும், வாழ்க்கை சோதனை, வேதனை, பிரிவு, ஏமாற்றம் தருவனவாகவுள்ளன.

பெயரெண் 26 துர்அதிஸ்டமான எண். பண்பிருந்தாலும் சோதனை தேடிவரும், காம உணர்வும் தீய குணங்களும் தரும் எண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84688

பெயரெண் 27 – உயர்ந்த தகுதியும் ஒப்பற்ற புகழும் சத்துரு ஜெயமும் அதிகார ஆணவமும் மிகுந்து நிற்கும், பாக்கியம் தரும் சிறு கோபத்தை உருவாக்கும்.

பெயரெண் 28 - பாவத்தின் சின்னமென எண்ணும் எண். முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை ஏற்படுத்தும்.

பெயரெண் 29 — மற்றோரைத் துயரப்படுத்துமெண். ஏமாற்றம் தரும் எண். தீய நட்பை தோற்றுவிக்கும். எந்தவகையாலும் ஏற்புடையததல்ல இந்த எண்.

பெயரெண் 30 — குருபலமிக்க எண். கடன்களால் கவலையும் தொழில் தோல்வியும் முன்னேற்றமில்லா நிலையும் தரும் எண்.

பேயரெண் 31 — அடுத்தவரை நம்பி ஏமாற்றும் தன்மை மிக்கது. வாழ்க்கையை வளமாக்க முடியாத எண்.

பெயரெண் 32 - மனிதரை வசியச்செய்யும் எண். எத்தொழிலானுலும் கைராசியைத் தரும். இலட்சிய வாழ்வுதருமெண்.

பெயரெண் 33 - குதூகலான குடும்ப வாழ்வைத் தருமெண். தெய்வ பலமும் லட்சுமிகரமும் நல்கும் அற்புத எண்.

பெயரெண் 34 - இவ்வெண்ணையுடையவர்களைக் கண்டு எழுந்து விழுவர். கடனும் கவலையும் தரும் எண் இது.

பெயரெண் 35 –பண ஆசையையும், காம சிந்தனையையும், தீங்கு செய்யும் ஆற்றலைத் தரும் எண் இது, சபல குணத்தைத் தோற்றுவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெண் 36- தளராத ஊக்கத்தையும் நிறைந்த வாழ்வையும் தரும். நாவண்மையை தோற்றுவிக்கும். சகல பாக்கியமுள்ள எண் இது.

பெயரெண் 37 - தெய்வ அம்சம் நிறைந்த எண் குதூகல குடும்ப வாழ்வைத் தராவிட்டாலும் சிறப்புக் குரிய எண்.

பெயரெண் 38 - வர்த்தகத் துறையில் மட்டும் பெயர் தரும். ஏற்றம் இறக்கம் தரும். வாழ்வு சீரற்றது.

பெயரெண் 39 - திறமைக்கேற்ற அதிஸ்டம் தரா விட்டாலும் சிலரை வாழ்விக்கிறது. எண்கணித மேதை கள் சிறப்படைகிறார்கள்.

பெயரெண் 40 - இவ்வெண் வாழ்விலும் செய் தொழிலாலும் அதிருப்தி தரும் எண். நம்பிக்கை இருந்தால் மட்டும் உயரும் எண்.

பெயரெண் 41 - ஏற்றம் தரும் எண். வாழ்வு வளம்பெறும். உயர்வடைவர், லட்சுமி கடாச்ச முண்டு. சுபிட்சமிக்கது.

பெயரெண் - 42 சிறப்பான எண், குறைவற்ற செல்வமும் குறைந்த வாழ்வு தரும் எண். அந்தஸ்து பதவி தேடிவரும்.

பெயரெண் - 43 பக்தியும் பண்பும் எளிமையும் மிக்க எண் சோதனை, நஸ்டம், ஏமாற்றம் தரும் எண்.

பெயரெண் - 44 குறுக்கு வழியில் சென்றாலும் குபேரனாக மாறலாம். இறை வாழ்வை ஏற்படுத்தும் எண் விரும்பத்தக்க எண்ணல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெண் - 45 குடும்ப வாழ்வில் குதூகலத்தைக் காண, அதிஸ்டத்தை நாட ஏற்ற எண் தன வசியமும் ஜன வசியமும் தரும் எண்.

பெயரெண் - 46 எண்களின் ஏணியாக திகழும் எண். அதிஸ்டமும் முன்னேற்றமும் உயர்வும் தரும் எண்.

பெயரெண் - 47 நன்மையும் தீமையும் கலந்த எண். கண் பார்வையைப் பாதிக்கும் எண்ணுக உள்ளது.

பெயரெண் - 48 பெருமை தருமெண்ணல்ல, சோதனையும், துயரும் தோற்றுவிக்கும் எண்ணுகவுள்ளது.

பெயரெண் - 49 நிலையான அதிஸ்டம் தருமெண்ணல்ல. அடுத்துக் கெடுக்கும் இயல்புடையது. அதிஸ்டமற்றது.

பெயரெண் - 50 பிற்பகுதியில் அதிஸ்டம் தரும் எண். இறையருள் மேன்மை தரும் நீடித்த ஆயுளைக் கொடுக்குமெண்.

பெயரெண் - 51 ஆரம்பத்தில் உயர்வைத் தந்து திடீரென சரிவைத் தரலாம். எதிர்ப்பையும் ஆபத்தையும் கண்டு அஞ்சவேண்டிய எண்.

பெயரெண் - 52 சோதனை மிகுந்த எண், தீராத கடனும், அலைச்சலும் கொடுக்கும் எண்.

பெயரெண் - 53 நல்லவர்களை வம்பில் மாட்டும் எண். கொள்ளைலாபம் அடிப்போரை வாழவைக்கும், விபத்தையும் மரணத்தையும் கொடுக்கத் தயங்காத எண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெண் - 54 கடும் உழைப்பில் பயன் தரும் எண். இது நல்லதைச் சொன்னாலும் பொல்லாங்கு விளையும் எண். போராட்டமிக்கது.

பெயரெண் - 55 படிப்படியாக முன்னேறும் எண். குடும்ப வாழ்வில் குழப்ப நிலை இருக்கும். சொர்க்கவாசல் எண் என்றும் அழைக்கலாம்.

பெயரெண் - 57 செல்வமழை பொழியும் எண். ஜனவசியமுள்ள எண் ஹொட்டல் தொழிலுக்கு உயர்ச்சியான எண்.

பெயரெண் - 58 முற்பகுதியில் உயர்வு தந்து பிற்பகுதியில் சரிவைத்தரும் இந்த எண்ணை வைப்பவர் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

பெயரெண் - 59 சக்திமிக்க எண். அறிஞராக்கும் பெரும் பொருளீட்ட சக்திவாய்ந்த எண்.

பெயரெண் 60 குபேர சம்பந்தம், குதூகல வாழ்வு தரும் எண். அதிஸ்டப்பெயர் எண்ணாகும்.

பெயரெண் - 61 சுகம்பெற வழி இருந்தும் அக மகிழ முடியாத எண். இல்வாழ்வில் சிறு சோதனை தரும் எண். விரத்தியும் வேதனையும் உள்ள எண்.

பெயரெண் - 62 தடை, தாமதம், சங்கடம் பிரச்சனை எண்ணாகவுள்ளது.

பெயரெண் - 63 எடுத்த காரியத்தை முடிக்க, எதிரிகளை முறியடிக்க உகந்த எண். ஆடை ஆபரணம் தரும் எண்.

பெயரெண் - 64 முற்பகுதி முத்தாகவும், பிற்பகுதி வாழ்வு சோகமாகவும் உள்ள பெயரெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெண் 65 - நடுத்தர வயதுக்குப்பின்னர் பல் வகை சிறப்பளிக்கும் உயரிய பெயரெண்.

பெயரெண் - 66 பெண்களுக்காக பெரும் பணத் தைச் செலவு செய்யும் பெயரெண். உழைப்பிருந்தும் ஓட்டாண்டியாக்கும் தன்மை கொண்ட எண். கலா ரசனை உள்ள எண்.

பெயரெண் - 67 உயர்விலும் உறுத்தல் தரும் பெய ரெண். உயர்மட்ட எதிர்ப்பு மன வேதனையைத் தரும் எண்.

பெயரெண் - 68 பெரும் பொருள் ஈட்டும் ஆற் றலைத்தரும் எண் இது பல வர்த்தகர்களினது ஸ்தாப னங்களில் இவ்வெண் கோடி கோடியாக கொடுக்கிறது.

பெயரெண் 69 லட்சுமிகரமும் இராஜவசியமும் தரும் எண். சகல பாக்கியங்களையும் அள்ளித்தரும் எண்.

பெயரெண் 70 இவ்வெண் அலைகடலில் தத்தளிக் கும் நிலையைத்தருகிறது அதிஷ்டமற்ற எண்

பெயரெண் 71 ஓரளவு உயர்வும் சறுக்கலும் தரும் எண் இது பொருத்தமானதல்ல.

பெயரெண் 72 வாகனயோகமுள்ள எண் இது பலமாடிக்கட்டிடங்களைக் கூடதரலாம், வர்த்தக சின் னங்களுக்கு அதிஷ்டமான பெயரெண்,

பெயரெண் 73 நம்பிக்கை தரும் எண் அதிஷ் டம் அழகு, அமைப்புள்ள எண்.

பெயரெண் 74 நிலைத்த புகழுக்கு உரித்தான எண்ணல்ல ஏற்ற இறக்கமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெண் 75 — ஆரம்பத்தில் உயர்வை வாரிவ ழங்கினாலும் மத்திம வயதில் வீழ்ச்சிதரும் எண்இது.

பெயரெண் 76 — சோதனை தரும் எண்இது வேதனைதான் பரிசாக கிடைக்கும்.

பெயரெண் 77— அருளையும் பொருளையும் அள்ளித் தரும் எண் இது.

பெயரெண் 78 — பெண்களால் பிரச்சனை தரும் எண் வீண்பழி அவதூறு உண்டு.

பெயரெண் 79 —சோதனைகளால் "எல்லாம் இறைவன் மயம்" என்பவர்கள் இப்பெயரெண் உண்டு.

பெயரெண் 80 — வாழ்க்கைக்கு உதவாத எண் பட்டது போதுமென்பவர்கள் இவ்வெண்களை உடையவர்கள்.

பெயரெண் 81 — முயன்றால் முன்னேறலாமென எண்ணும் எண் அதிஷ்டம் தரவரல்லது.

பெயரெண் 82 — வெற்றிக்கு உத்தரவாதமளிக்காத எண் அதிஷ்டமற்றது.

பெயரெண் 83— சக்திகுறைந்த எண்.

பெயரெண் 84 — விலக்கவேண்டிய எண்.

பெயரெண் 85 — தொல்லைகளையும் துயரத்தையும் தந்து இறுதியில் மகிழ்ச்சி தரும் எண் இது.

பெயரெண் 86 — புயலுக்குப் பின் அமைதியென இறுதியில் நிம்மதிதரும் எண்.

பெயரெண் 87 — பலம் குறைந்ததால் நலம் பயக்காத எண் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84688

பெயரெண் 88 — வேண்டவே வேண்டாத எண்.

பெயரெண் 89 — இதனை ஏற்பதால் பலன் கிட்டாது

பெயரெண் 90 — அதிஷ்டத்தைத் தந்தாலும் வழக்கு வம்புகளில் மாட்டும்.

## 8 எண்ணிலே திருமணம்

திருமணங்கள் சொர்க்கத்திலே நிச்சயிக்கப்படுகின்றது எவ்வளவு உண்மை. எண் பொருத்தம் பார்க்காத எத்தனை குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன. எல்லோரும் இன்பமாக வாழ்கின்றனர் என்று எண்ணிப்பார்க்க முடியுமா? விதியை மதியால் வெல்லமுடியுமா? இல்லை விதியால் நிகழும் அனந்தங்களுக்கு ஓரளவு தெளிவு பெறலாம். அதனல் தான் எண் பொருத்தம் பார்ப்பது எமக்கு ஓரளவுக்காவது தெளிவு பெற வாய்ப்புண்டு.

எண் ஒன்றுக்குரியவர்கள் 4, 6, 7 எண்ணுக்குரியவர்களோடு இணைந்து வாழ்ந்தால் மணவாழ்வு சிறக்கும்

மூளைபலமிக்க இரண்டு எண்காரரர்கள் கூடியவரை ஏழு எண்காரரர்களை மணக்கலாம் ஒன்று மூன்று ஐந்து எட்டு எண்காரரர்களும் உதவி செய்வர்.

மூன்று எண்காரரர்கள். ஆறு அல்லது எட்டு ஒன்பது எண்காரரை மணப்பது நலம்.

நான்கு எண்காரரர்கள் 1, 7, 9, எண் காரரர்களை மணப்பது பிரச்சனை தராது.

ஐந்து எண்காரரர்கள், எல்லா எண்காரரர்களையும் வசியம் பண்ணினாலும் ஐந்து எண்காரரர்களுடன் இணைந்தவாழ்வு மேன்மைதரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு எண்காரர்கள் 3, 6, 9 எண் காரரை மணக்கலாம் 5 எண்காரரை விலக்குக.

ஏழு எண் காரர்களுக்கு வாழ்வு மட்டாக இருப்பதால் 01, 04, 08 எண் காரரை மணக்கலாம்

எட்டு எண்காரர்கள், 02, 04, 05 எண்காரர்களை மணப்பது வாழ்வுசிறக்கும்.

# 9 எண்ணிலே அதிஸ்டம்

நவரத்தினக் கற்களுக்கும் எண்களுக்கும் தொடர்புண்டு. எண்ணில் ஒன்பதுவகையான கற்களும் அவரவர் எண்களுக்கு அதிஸ்டத்தை அளிப்பனவாகும், நவரத்தினக்கற்கள் ஓரினத்தோடு தொடர்பு கொள்ளும் போது ஓர் ஈர்ப்புச்சக்தியால் வாழ்க்கைக்கு போதிய அதிஸ்டத்தை அளிப்பதாக கூறப்படுகிறது. கற்களில் ஆண் இனம் பெண் இனம் அலி இனம் என மூவகையுண்டு. ஆண் இனம் அதிஷ்டத்தை அள்ளித்தரும.

1ம் எண்ணைச் சேர்ந்தவர்களுக்கு மஞ்சள் வைரம் கருநீலம், மஞ்சள் புஸ்பராகம் அதிஷ்டகரமானது

2ம் எண்ணைச் சேர்ந்தவர்களுக்கு வெளிறிய பச்சைக்கல்லும். (மூன்ஸ்ரோண்) வைடூரியம் வளம் தரும்.

3ம் எண்ணைச் சேர்ந்தவர்களுக்கு செவ்வந்திக்கல் (எமதிஸ்ட்) அதிஷ்டமானது.

நாலு எண்காரர்களுக்கு கருமுத்தும், நீலக்கல்லும் அணியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து எண்காரர்கள் பிளாட்டினம் பதித்த வைரம் அதிஷ்டமானது,

ஆறு எண்காரர்கள் மரகதம், அல்லது இந்திர நீலம் அதிஷ்டமானது.

ஏழு எண்காரர்களுக்கு சந்திரக்கல்லும் கோமேதமும். ஏற்றது.

எட்டு எண்காரர்களுக்கு கரிய நீலக்கல் வைரம் கருமுத்து அணியலாம்.

ஒன்பது எண்காரர்கள் சிவப்புக்கல் அல்லது மாணிக்கம் அதிஷ்டமானது

எப்போதும் கல்லில் சிறியசிறிய புள்ளிகள் அழுக்கு போன்ற உள்ள கற்கள் அலி என்பதால் இவற்றை அணியக் கூடாது சிறிய கற்கள் பெண் இன மாதலால் வளம்குறைவு.

## 10

# எண்ணிலே நாளும் கோளும்

ஒன்பது எண்களிலும் பிறந்தவர்களுக்கு ஒவ்வோர் நாள் அதிஷ்டம் தரும், கிழமைகள் வளம் கொடுக்கும் நிறம் வாய்ப்பைத் தரும். அதிஷ்டதிசை செல்வாக்கு தரும் இவற்றை கிரமமாக தருகிறோம்.

எண் ஒன்றுக்குரிய விசேடம்,

அதிஷ்டம் தரும் எண்கள் 1, 4, 5

அதிஷ்ட திகதி 1, 4, 5, 10, 13, 14, 19, 22, 23, 28, 31

அதிஷ்டக் கிழமை ஞாயிறு, புதன்,

வஸ்திரம் இலைப்புப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் இரண்டுக்குரிய விஷேடம்

அதிஷ்டம் தரும் எண்கள் 2, 6, 7,

அதஷ்ட திகதிகள் 2, 6, 7, 11, 15 16, 20, 24. 25, 29

அதிஷ்டக்கிழமை திங்கள், வெள்ளி

அதிஷ்டதிசை கிழக்கு, தெ ் கிழக்கு

அதிஷ்ட நிறம் வெண்பட்டு

எண் மூன்றுக்குரிய விசேடம்,

அதஷ்ட எண்கள் 1, 3, 9,

அதிஷ்ட திகதிகள் 01, 10. 19, 28, 03, 12. 21, 30, 09 18, 27

அதிஷ்ட திசைகள் வடக்கு, தெற்கு, கிழக்கு

அதிஷ்ட நிறம் மஞ்சள், பட்டு

அதிஷ்டக்கிழமை ஞாயிறு, வியாழன், செவ்வாய்

எண் நான்குக்குரிய அதிஷ்டம்

அதிஷ்ட எண்கள் 1, 4, 6,

அதிஷ்ட திகதிகள் 1, 4, 6, 10, 13, 15 19, 22, 24. 26, 31,

அதிஷ்டக்கிழமை ஞாயிறு, வெள்ணி

அதிஷ்ட திசைகள் கிழக்கு, தென்மேற்கு

அதிஷ்ட நிறம் கருநீலம்

எண் ஐந்துக்குரிய விசேடம்

அதிஷ்டம் தரும் எண்கள் 5, 6

அதிஷ்ட திகதிகள் 5, 6, 14, 15, 23, 24,

அதிஷ்டக்கிழமை புதன், வெள்ளி

அதிஷ்ட திசை வடக்கு, கிழக்கு

அதிஷ்ட நிறம் பச்சைப்பட்டு

எண் ஆறுக்குரிய விஷேடம்

அதிஷ்ட எண் 6, 8

அதிஷ்ட திகதிகள் 6, 8, 15, 17, 24, 26

அதிஷ்ட நிறம் வெண்பட்டு

அதிஷ்ட திசைகள் மேற்கு, கிழக்கு

அதிஷ்டக்கிழமை வெள்ளி, சனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் ஏழுக்குரிய சிறப்பம்சம்

அதிஷ்ட எண்கள் 3, 7,
அதிஷ்ட திகதிகள் 3, 7. 12, 16, 21, 25, 30
அதிஷ்டக்கிழமைகள் செவ்வாய், வியாழன்
அதிஷ்ட திசைகள் தெற்கு வடமேற்கு வடக்கு
அதிஷ்ட நிறம் பலவர்ணம்

எண் எட்டுக்குரிய அதிஷ்டங்கள்

அதிஷ்டம் தரும் எண்கள் 4, 8
அதிஷ்டம் தரும் திகதிகள் 4, 8, 13 17, 22, 26, 31
அதிஷ்ட திசைகள் மேற்கு
அதிஷ்டக்கிழமை சனி
அதிஷ்ட நிறம் நீலப்பட்டு

எண் ஒன்பதுக்குரிய சிறப்புக்கள்

அதிஷ்ட எண்கள் 3, 6
அதிஷ்ட திகதிகள் 3, 9, 12, 18, 21, 27, 30
அதிஷ்ட நிறம் செம்பட்டு
அதிஷ்ட திசைகள் தெற்கு, வடக்கு
அதிஷ்டக்கிழமை வியாழன், செவ்வாய்

எனவே இவற்றை அனுசரித்து காரியம் செய்தால் வெற்றிகள், லாபங்கள் பெருகும்.

# 11 எண்ணிலே தொழில்கள்

ஒவ்வொருவருக்கும் தொழில் புருஷலட்சணம் என்பார்கள், ஆனால், செய்யும் தொழில் அதிஷ்டமாக இருந்தால் பிரச்சனை இருக்காது செல்வம் பெருகும்

ஒன்று எண்காரர்களுக்கு உயர் பதவி கிட்டும் நிர்வாக இயந்திரத்தை இயக்கும் துறைகளில் பிரபல்யம் அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு எண்காரர்களுக்கு பொருள் திரட்டும் எத்துறையும் ஏற்றது. கற்பனை திறன்மிக்கவரெனலாம் வியாபாரத்துறை சிறந்தது.

மூன்று எண்காரர்களுக்கு சட்டத்துறை, வங்கித் தொழில் வாழ்வளிக்கும்.

நான்கு எண்காரர்களுக்கு நீதித்துறை சிறந்தது. வியாபாரத்துறையிலும் ஈடுபடலாம்.

ஐந்து எண்காரர்களுக்கு கலைத்துறையும், கணிதத் துறையும் ஏற்றது.

ஆறு எண்காரர்கள் கலைத்துறை, வங்கித்துறை நீதித்துறை பொருந்தும்

ஏழு எண்காரர்களுக்கு ஜலசம்பந்தமான வியாபாரத்துறை அதிஷ்டமானது.

எட்டு எண்காரர்களுக்கு இயந்திரத்துறை, விவசாயத்துறை வளம்தரும்.

ஒன்பது எண்காரர்களுக்கு, பொறியியல் துறை அல்லது படைத்துறை சிறந்தது.

## 12 எண்ணிலே நண்பர்கள்

வாழ்வுக்கு வளம் தருபவர்கள் நல்ல நண்பர்கள் உயிர்காப்போன் தோழன் என்பது எவ்வளவு உண்மை நண்பர்களாலும் அறிந்தவருண்டு நமக்கு அதிஷ்டம் தரும் நண்பர்களை நமது எண்ணுக்கு அமைவாக தேர்ந்தெடுத்தல் உயிரிலும் மேலாக உங்களை நேசிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| எண் | அதிஷ்ட நண்பர்களது எண் |
|---|---|
| 01 | 2, 4, 7 |
| 02 | 07 |
| 03 | 3, 6, 9 |
| 04 | 1, 2, 7. 8 |
| 05 | எல்லா எண்ணும் |
| 06 | 3, 6, 9 |
| 07 | 2, 7 |
| 08 | 4, 5, 8 |
| 09 | 3, 5, 6 |

## 13 எண்ணிலே வியாதி

வியாதியில்லாதவர் என்று ஒருவரும் இல்லை எல்லோருக்கும் ஏதோ வியாதி இருக்கும். சிலருக்கு கை மருந்திலே குணமாகும். பலருக்கு தகுந்த சிகிச்சை பெறவேண்டியிருக்கும் ஆனுல் எண்ணைக்கொண்டு ஒருவரின் வியாதியைக் கண்டுபிடிக்கலாம்.

ஒன்று எண்காரர்களுக்கு, இரத்தமூத்த நோய், கண் வியாதி இருக்கும்.

இரண்டு எண்காரர்களுக்கு வயிற்றுக்கோளாறு, நீரழிவு, இரப்பை குடல் சம்பந்தமான நோய்காட்டும்

மூன்று எண்காரர்களுக்கு நரம்புத்தளர்ச்சி, மூத்திரக்கோளாறு தோல் வியாதியுண்டு.

நான்கு எண்காரர்களுக்கு மூச்சுக் கோளாறு, சிறுநீரக கோளாறு, சோகை மூளைக்கோளாறு காட்டும்.

ஐந்து எண்காரர்களுக்கு தூக்கமின்மை, வாதம் தோலில் அலர்ஜி காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு எண்காரர்களுக்கு, மூக்கு சுவாசப்பை நோய் இருதய கோளாறுண்டு.

ஏழு எண்காரர்களுக்கு மனச்சோர்வு, மனக்கிலேசம், தோல்வியாதி ஏற்படும்.

எட்டு எண்காரர்களுக்கு கல்லீரல், பித்தம், கீல்வாதம், தலைவலி ஏற்படும்.

ஒன்பது எண்காரர்களுக்கு, தொற்று நோய் பரவக்கூடும்.

## 14 எண்களும் பரிகாரங்களும்

நட்சத்திரங்களுக்கு நாயகர்கள் இருப்பது போல் அவரவர் பிறந்த எண்ணுக்கும் நாயகர்கள், தேவதைகள் உண்டு

ஒவ்வோர் எண்ணுக்குரிய தேவதைபற்றியல்லாமல் வழிபடும் தெய்வங்கள் பற்றியும் இங்கு தருகின்றோம்.

| எண் | நாயகன் | தேவதை | வழிபடும் தெய்வம் |
|---|---|---|---|
| ஒன்று | சூரியன் | உருத்திரன் | சிவன் |
| இரண்டு | சந்திரன் | வருணன் | அம்மன் |
| மூன்று | குரு | பிரம்மன் | பெருமாள் |
| நான்கு | ராகு | சர்வேஸ்வரன் | துர்க்கை |
| ஐந்து | புதன் | நாராயணன் | பெருமாள் |
| ஆறு | சுக்கிரன் | இந்திரன் | அஷ்டலட்சுமி |
| ஏழு | கேது | பிரம்மா | விநாயகன் அனுமான் |
| எட்டு | சனி | பிரஜாபதி | சிவன் |
| ஒன்பது | செவ்வாய் | சுப்பிரமணியன் | முருகன் |

இவ் அட்டவணையில் கூறப்பட்டுள்ள தெய்வங்களை வழிபட்டால் நன்மை அதிஷ்டம் பரிகாரமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 31 திகதிகளில் பிறந்தவர்களுக்கும் தனித்தனியான பலன்கள்

1ம் திகதி பிறந்தவர்கள் தங்கள் கொள்கையே மேலானது என்று கருதுவார்கள், மற்றவர்கள் தங்கள் கொள்கைப்படி நடக்கவேண்டும் என எதிர்பார்ப்பவர்கள் அசைக்க முடியாத உறுதி கொண்டவர்கள். தங்கள் கோட்பாடுகளால் வெற்றி பெறவும் செய்வார்கள்.

2ம் திகதி பிறந்தவர்கள் அமைதியானவர்கள் இவர்களுக்கு மனவளமே அடிப்படையாகும். சிறப்பான கற்பனையின் பிறப்பிடமான இவர்கள், உன்னதமான இலட்சியம் கொண்டவர்கள்.

3ம் திகதி பிறந்தவர்கள், உலகியல் அறிவில் ஏற்றம் பெறுவார்கள் எப்பணியையும் செய்வதற்கு சித்தமுள்ளவர்கள் எண்ணங்களை பரந்த கோணத்தில் அபிவிருத்தி செய்வார்கள்.

4ம் திகதி பிறந்தவர்கள் பல திருப்பங்களைச் சந்திக்க கூடியவர்கள் கண்டிப்பான இவர்கள் இனிமையை வரவழைப்பது அவசியம் மனோபலமும், சரீரபலமும் இருக்கும்.

5ம் திகதி பிறந்தவர்கள் எல்லோரையும் வசியப்படுத்துவார்கள் மதிப்பைப் பெற்று மதிப்பை வழங்குபவர்கள். உயர்ந்த நோக்கங்கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6ம் திகதி பிறந்தவர்கள் உழைப்பினுல் உயரக் கூடியவர்கள் கலையார்வமிக்கவர்கள். பெண்மையின் சுபாவமுடையவர்கள்.

7ம் தி-தி பிறந்தவர்கள் நிர்வாகத்தில் திறமையை வெளிப்படுத்துபவர்கள், சாந்தமுளளவர்கள் வெளிநாடு செல்லக்கூடியவர்கள், அறிவுள்ளவர்கள்.

8ம் திகதி பிறந்தவர்கள் பிறருக்காக உழைப்பவர் கள் கடும் போக்குடையவர்கள் தெய்வவழிபாடு மிக்க வர், தியாககுண ம் இருக்கும்.

9ம் திகதி பிறந்தவர்கள் வெற்றி வாய்ப்புடைய வர்கள், மூளைபலம் அதிகம் கடும் உழைப்பால் சாதனை படைப்பர்.

10ம் திகதி பிறந்தவர்கள் அடக்கசக்தி மிக்கவர் மற்றவர்களுக்கு உதவும் சுபாவகுணமிருக்கு ட. ்ன்ன தமான பணிகளில தீவிரவா க ஈடுபடுவார்கள்.

11ம் திகதி பிறந்தவர்கள் ந ் பிக்கையில் சாதனை புரிபவர்கள் கற்பனைவளம் நிறைந்திரு க்கும், ச தனை யாளர்கள் தெய்வ வழிபாடு உடைடவர்கள்

12ம் திகதி பிறந்தவர்கள் பிறநலம் கொண்டு உழைப்பவர்கள் பொறுப்புணர்ந்து கடமையாற்றுபவர் கள், சிறப்பாக செயலாற்றுபவர்கள்.

13ம் திகதி பிறந்தவர்கள், வாழ்வில் சங்கடங்க ளும் மாற்றங்களுமுண்டு, பெரியோ ைர கனம்பண்ணு பவர்கள், தெய்வ அருள் மிக்கவர்கள் வெளிப்படை யாக பழகுவதனுல் மேன்மையடைவர்.

14ம் திகதி பிறந்தவர்கள், பலராலும் பாராட் டப்படுவர் சிறந்த வர்த்தகராக விளங்க முடியும் அதிஷ்டம் உடையவர்கள். நல்லோர் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15ம் திகதி பிறந்தவர்கள் சிலசமயங்களில் அடக்கத்தையும் நேர்மையையும் இழப்பவர்கள், பேச்சில் இனிமையும் கவர்ச்சியும் இருக்கும், கலைஞராவார்கள்.

16ம் திகதி பிறந்தவர்கள், மனவளம் நிறைந்தவர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்புமிக்கவர்கள். சிலசமயங்களில் குளம்புபவர்கள் இவாகள் தான்.

17ம் திகதி பிறந்தவர்கள், புரட்சியாளர்கள் கஸ்டங்களைத் தாங்குபவர்கள், மனத்தில் தாராளமுண்டு. கஸ்டப்பட்டு பொருள் தேடுபவர்கள், பெரும்புகழ் சேரும்.

18ம் திகதி பிறந்தவர்கள் உணர்ச்சி மிக்கவர் போராட்டவாதி, வாழ்க்கையில் விபரீதபோக்குடையவர் பிறர் சொல் கேட்டால் உயர்வுண்டு.

19ம் திகதி பிறந்தவர்கள் திறமைமிக்கவர் பிடிவாத குணமுடையோர், அரியசெயல் செய்வோர் அடக்கமுடையோர்.

20ம் திகதி பிறந்தவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டி, தலைமைதாங்கும் தகுதிபடைத்தவர்கள். திறமைசாலிகள், பொதுத் தொண்டினால் உயர்பவர்கள் இவர்கள தான்.

21ம் திகதி பிறந்தவர்கள் ஞானம் நிறைந்தவர்கள் அறிஞராவர். சமுதாயத்தில் சிறப்பான இடம் வகிப்பவர்கள் வைராக்கியம் உடையவர்கள்.

22ம் திகதி பிறந்தவர்கள் உழைப்பினால் உயர்பவர்கள் திறமையால முன்னேறுபவர்கள் நேர்மை கொண்டவர்கள்.

23ம் திகதி பிறந்தவர்களுக்கு அதிஸ்ட வாய்ப்புக்கள் ஏராளம் பலராலும் பாராட்டப்படுவார்கள் சிறப்பான இடம் வகிப்பார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24ந் திகதி பிறந்தவர்கள், சுகபோகம் அனுபவிப் பவர்கள், அதிஷ்டசாலி அடக்கமாக காரியமாற்றுப வர்கள் புகழ்மிக்கவர்கள்.

25ந் திகதி பிறந்தவர்கள், வாழ்க்கையில் உயர் வடைபவர்கள். ஆழ்ந்த சிந்தனையாளர் அரவணைப்பவர் களை ஊக்குவிப்பார்.

26ந் திகதி பிறந்தவர்கள் சோதனைக்கு உட்படு வார்கள் பொறுமையானவர்கள் அதிஷ்டம் குறைந்த வர்கள், இறைவழிபாட்டால் ஏற்றமடைபவர்கள்.

27ந் திகதி பிறந்தவர்கள். அவசரப்படாமல் உயர்வடைபவர்கள் சாதனையாளர்கள் உழைப்பாளிகள் முன்கோபி.

28ந் திகதி பிறந்தவர்கள், ஏற்றமடைபவர்கள், வாழ்வில் அதிஷ்டமற்றவர்கள் உழைப்பால் மட்டுமே உயரமுடியும்.

29ந் திகதி பிறந்தவர்கள் பண்புடன் நடக்க பழகவேண்டும். எதிலும் முன்னுக்கு நிற்க ஆசைப் படுவர், புரட்சியாளர்கள், சமுகத்தில் உயருவதானுல் தான் திருந்தி நடக்கவேண்டும்.

30ந் திகதி பிறந்தவர்கள், சமுதாயப்பணிகளில் ஈடுபடுபவர்கள் உறுதியான மனப்பக்குவம் [மிக்கவர் கள் உயர்ந்தோர் உன்னத சிறப்புடையோர்.

31ந் திகதி பிறந்தவர்கள் எதிர்ப்புக்கு அஞ்சார் கடும் கோட்பாளர். துணிச்சல் மிக்கவர். புரட்சியா ளர்கள் செயல் புலிகள இவர்கள் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84688

# 16 பெண்களைப்பற்றிய எண்கள்

உலகில் எல்லாப்பெண்களும் பராசக்தியின் சொரூபமே. ஆனால் அவர்களது உடல் அமைப்பும் குணவிசேஷசங்களும் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களும், அவரவரது பிறப் பெண்ணையும், விதியெண்ணையும். அனுசரித்தே ஏற்படுகின்றது. கணவன் மனைவி இருவரினதும் தன்மைக்கு ஏற்றவாறே குழந்தைகளும் பிறக்கின்றன. எனவே தான் எண்கள் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை சொல்லாமலே, புரிந்திருக்கும்.

எண் ஒன்றில் பிறந்த பெண்கள், தாங்களும் சந்தோஷமாக இருந்து மற்றவர்களையும், சந்தோஷப்படுத்தும் அதிஷ்டசாலிகள். எந்தப் பிரச்சனையானாலும் சரியான கருத்தை வெளியிடுபவர்கள் கவர்ச்சியாக பேசுபவர்கள், தற்புகழ்ச்சி பிடியாதவர்கள், விரோதம் இல்லாவிட்டாலும், ஆழ்ந்த சினேகம் பிடிக்காது. 01, 04, 08 கூட்டு எண வரும்போது முக்கிய சம்பவங்கள் நிகழும், இளகிய மனமிருப்பதால், கணவனது கஸ்டத்தை அறிந்து சேமிப்பையும் அழித்து விடும் தன்மைமிக்கவர்கள், இவர்கள் 04. 13, 22, 31, 08 17, 26ன் திகதியில் பிறந்த ஆண்களை மணப்பது அதிஷ்டம்.

இரண்டு எண்களில் பிறந்த பெண்கள், மற்றவர்கள் மத்தியில் தங்களுடைய மனத்தாங்கல்களைப் பற்றியே பேசும் இயல்புடையவர், இவர்கள் கற்பனாசத்திமிக்கவர்கள் கவலையின் நிமித்தம் ஏதாவது அதிகமாக சிந்தித்தால், மனம் குளம்பிப் போபவர்களும் இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். சிக்கனம் பற்றிப் பேசுவார்கள் அதிக செலவாளிகள், இவர்கள் சந்தேகப் பிராணிகள், இவர்களுக்கு 01 02, 04 07, 08 கூட்டு எண்ணையுடைய வயதில் முக்கிய சம்பவம் நிகழும் இவர்களில் ஒரு சிலருக்கே குடும்பவாழ்வு சிறப்பாக அமையும். 03, 12, 21, 30, 07 16, 25, 04, 13, 22, 31 ஆகிய எண்ணில் பிறந்த ஆண்களை மணப்பது நலம்.

மூன்று எண்ணிலே பிறந்த பெண்கள், குடும்பத்தில் மற்றவர்களின் நலன்களுக்காக தியாகம் செய்பவர்கள், பழக்கவளக்கங்களில் கட்டுப்பாடானவர். உள்ளத்தில் கருணை இருந்தாலும் பேச்சில் கப்பீரம் இருக்கும், இவர்களுக்கு 02, 03 கூட்டுவயதுகளில் முக்கிய சம்பவம் நிகழும், இவர்கள் 02, 03, 09 எண்ணில் பிறந்தவர்களுடன் குடும்பம் நடத்தலாம் ஆறு எண் ஆண்கள் கெடுதி செய்வர்.

நான்கு எண்ணிலே பிறந்த பெண்கள், மனத்தில் சூதுவாது அற்றவர்கள் காரியத்தில் கண்ணுயிருப்பர். எதையும் அறியும் ஆற்றலுள்ளவர்கள், எதிர்சட்சிவாதமே எப்போதும் இருக்கும், உதவி செய்வதில் முன்நிற்பார்கள். 01, 02. 04, 08 எண்ணையுடைய வயதில் முக்கிய சம்பவங்கள் நிகழும், 01, 04, 08 எண்ணில் பிறந்தவர்களுடன் இனிமையாக வாழலாம்.

ஐந்து எண்ணிலே பிறந்த பெண்கள், எல்லாவற்றிலும் பொறுப்பற்றவர்கள், தேவையற்றவற்றைப் பற்றி சிந்திப்பார்கள், அலட்டல்காரர்களும் இவர்கள்தான், வீட்டை அலங்கரிப்பதிலும், நிர்வாகத்திலும் வல்லவர்கள், ஐந்து எண்ணையுடையவயதில் முக்கிய சம்பவங்கள் நிகழும் பொதுவாக ஐந்து எண் பெண்களுக்கு புத்திர பாக்கியம் குறைவானதால். ஒன்பது எண்ணையுடைய ஆணை மணப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு எண்ணையுடைய பெண்கள். எதையும் காப்பாற்ற தெரியாதவர்கள், சந்தோஷமாக சிரித்துப் பேசுவதில் வல்லவர்கள், பிறரது நிலைகண்டு உதவுவார்கள் பேச்சுச் சாதுரியமும், சத்தியும் மிக்கவர்கள் ஆழ்ந்த தெய்வ சிந்தனையுடையவர்கள், 06, 09 கூட்டு எண்ணையுடைய வயதுகளில் அதிஷ்டமுண்டு, 06, 15. 24, 09, 18, 27ல் பிறந்த ஆண்களை மணப்பது நலம் 03, 12 21, 30ந் திகதியில் பிறந்த ஆண்கள் சிரமத்தைக் கொடுப்பார்கள்.

ஏழு எண்ணில் பிறந்த பெண்கள், சதாகாலமும் எதைப்பற்றியாவது கவலைப்படுபவர்கள் இவர்கள் தான் எதற்கும் காது கொடுத்து கேட்பவரும் இவர்கள் தான், வாழ்வில் எதிர்ப்பையும் நோக்கும் பெண்கள் இவர்கள், இவர்களுக்கு 02, 07 உடைய வயதுகளில் அதிஷ்டமுண்டு குடும்ப வாழ்வில் அதிஷ்டம் குறைவாக உள்ளதால் 01, 02, 07, எண்காரரை மணப்பது நலம். இறையருள் மிக்கவர்கள் இவர்கள் தான்,

எட்டு எண்ணிலே பிறந்த பெண்கள், பொறுமை சாலிகள் சோர்வும், தாழ்வு மனப் பான்மையும் உள்ளவர்கள். கலகலப்பாக பேசமாட்டார்கள், தான் உண்டு தன் வேலையுண்டு என இருப்பவர்கள் இவர்கள்தான். 01, 04, 08 கூட்டு எண்கள் வரும் வயதுகளில் அதிஷ்டமுண்டு திருமணம் பலருக்கு சிறப்பாக அமையவில்லை 01, 06, 10, 15, 19, 24, 28, எண்ணில் பிறந்த ஆண்களை மணப்பது நலம். அழகிருந்தாலும் மனதுக்குப் பிடிக்காத கணவரே வாய்ப்பதுண்டு.

ஒன்பது எண்ணிலே பிறந்த பெண்கள், சண்டை என்றால் சற்று விலகாத குணமுடையவர்கள். மனதில் கள்ளம், கபடம், சூது இருக்காது. வாயாடி, பொல்லாதவள் என்று பட்டம் பெறுபவர்கள் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண் பெண்கள் தான். சுறுசுறுப்பானவர்கள், 03, 06, 09 கூட்டு எண்ணையுடைய வயதுகளில் அதிஷ்டம் கிடைக்கும், 03, 06, 09ன் திகதிகளில் பிறந்த ஆண்களை மணந்தால் தாம்பத்தியம் சிறக்கும்.

## 17 அதிஸ்ட மாதங்கள்.

வாழ்க்கையில், எந்தக்காரியமும், நல்ல முகூர்த்தத்தில் செய்யப்பட வேண்டுமென்பது சம்பிரதாயம். ஆனால் குறிப்பிட்ட மாதம் எந்த எண்காரருக்கு அதிஸ்டம் விளைவிக்குமென்று ஒரு சிலருக்குத்தான் தெரியும். சரியான மாதத்தில் கிழமையும் தேதியும் சேர்ந்தால் பெருத்த நன்மையுண்டாகுமென்பது எண்சாஸ்திரங்கள் ஆறு எண்ணையுடையவருக்கு வைகாசி மாதம் 06 - 15 - 24 ஆகிய ஏதாவது திகதியில் பெருத்த நன்மை கிடைக்கும்.

எண் அனுகூலமான மாதங்கள்,

01 — ஆவணி (சூரியன் வலிமை)
02 — ஆடி (சந்திரன் வலிமை)
03 — சித்திரை - கார்த்திகை - மார்கழி பங்குனி
04 — ஆடி - ஆவணி, (சூரிய - சந்திரர் வலிமை)
05 — சித்திரை, ஆனி-புரட்டாதி - கார்த்திகை
06 — சித்திரை - வைகாசி - ஐப்பசி - கார்த்திகை
07 — ஆடி ஆவணி
08 — ஆவணி
09 — ஆடி, ஆவணி தவிர்ந்த மாதங்கள்.

## 18 அவசியமான குறிப்புகள்

02, 04 08ல் ஒருவருக்குப் பிள்ளை பிறக்குமானால் அவர்வாழ்வில சோகமு கவ்வும்

கூட்டுத் தொகை ஒன்று வருகிற தேதியில் பிறந்தவர்கள் 04 எண்ணை கூரப்பட்டாலும் பொருளாதார சுபிட்சம் கிடைக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு எண்காரர்கள் வாழ்வில் எப்படி உயர்ந்தாலும் திருமணத்தின் பின் சிலகாலம் வீழ்ச்சியடைவார்கள்.

நாலு எண்காரர்கள் சொல்வதை ஏற்றால் பிரச்சனையில்லை

இரண்டு எண்காரர்கள் திருமண வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. குறைகள் உண்டு.

மூன்று எண்காரர்கள் தம்மைப்பற்றி பெரிதாக எண்ணுவார்கள்.

ஆறு எண்காரர்கள் தாம்பத்தியத்தில் பூரணசுகம் அடைவதில்லை.

ஒன்பது எண்காரர்கள் எல்லாம் தெரிந்தது போல நடிப்பவர்கள்

## 19 தெய்வீக வாழ்வில் எண்கள்

3, 6, + 9

உலக இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் 0 , 06, 09 எந்தளவிற்கு ஆதிக்கம் செய்திருக்கின்றது என்பதை சில சம்பவங்கள் எமக்கு தெரிவிக்கின்றன என சாஸ்திரப்படியும் கணித முறைப்படியும் 03. 06, 09 ஒன்றுக்கொன்று தொடர்புடையதை இங்கே காணலாம்.

இயேசுவின் தந்தை டேவிட் ஜோசப் என்பவர்,

DAVID JOSEPH

4 1 6 1 4 1 7 3 5 8 5 = 45 = 09

இயேசுவின் தாயார் பெயர் மேரி. இவரை வேர்ஜின் என்றும் மதர் என்றும் அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIRGIN
6 1 2 3 1 5 = 18 = 9
MOTHER
4 7 4 5 5 2 = 27 = 9

எனவே இயேசுவின் தாய் தந்தையரது பெயர் எண் ஒன்பதாகும்.

நாசரத் என்ற புண்ணிய பூமியிலே அன்னே மேரி புனித ஆவிமூலம் கருத்தரித்தாள்.

NAZARETH
5 1 7 1 2 5 4 5 = 30 = 3

எண் விதிப்படி, 30 எண் என்பது வெளியுலக இந்திரிய விஷயங்களை விட மானசீக விஷயத்தில் தான் அதிக ஈர்ப்புக் கொண்டது.

இயேசு பிறந்த இடம் யூதேயா.

JUDAEA
1 6 4 1 5 1 = 18 = 09

எண்களின் படி பதினெட்டு புரட்சியையும் போரையும் இரத்தத்தையும் அமைதியின்மையையும் குறிக்கும்.

இயேசு பிறந்த தினம் டிசம்பர் இருபத்தைந்து ஆங்கில ஜோதிடப்படி நவம்பர் 21 முதல் டிசம்பர் 27 வரை தனுராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம். இந்த இராசி சக்கரத்தில் ஒன்பதாவது இராசி. இந்த இராசியின் அதிபதி குரு. [இம்மாதம் பன்னிரெண்டாவது மாதம்.

இயேசுவை " ஜீஸஸ் கிரைஸ்ட் என்றே அழைக்கிறோம்.

JESUS CHRIST
1 5 3 6 3 3 5 2 1 3 4 = 36 = 09

இயேசு மதவிடயமாக பிரசாரம் செய்த இடம் ஜெரூசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J E R U S A L E M
1 5 2 6 3 1 3 5 4 = 30 = 03
அவர் பிரசாரத்தின் உட்பொருள் அன்பு
L O V E
3 7 6 5 = 21 = 03
இயேசுவின் வரலாற்றுப் புகழ்மிக்க பிரசாரம் பத்துக் கட்டளைகள்
TEN COMMANDMENTS
455 3 7 4 4 1 5 4 4 5 5 4 3 = 63 = 09
அவரது சிலுவையின் எண்
C R O S S
3 2 7 3 3 = 18 = 09
கத்தோலிக்கத்தின் எண்
C A T H O L I C
3 1 4 5 7 3 1 3 = 27 = 09
கிறிஸ்தவர் வழிபாட்டுத்தலம்
C H U R C H
3 5 6 2 3 5 = 24 = 06

எனவே தான் இந்நூலில் முன்சொன்ன அத்தியாயங்களில் பிறப்பையும விதியையும் மாற்ற முடியாது நடைமுறைகள் இவற்றுக்கு இயைவாக அமைகின்றன என்றேன்.

---

## பிழைதிருத்தம்

| பக் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| பக். 07 | 20ம் வரி | 90 | 09 |
| பக். 09 | 5ம் வரி | பிறப்பெண் 03 | பிறப்பெண் 04 |
| பக். 13 | 6ம் வரி | வேண் | வேண்டிய |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நூல் நிலையத்துக்கு
கோப்பாய் ந.இ.மயில்வாகனம்
அன்பளிப்பு

யாழ் நூல் நிலையத்துக்கு
கோப்பாய் ந.இ.மயில்வாகனம்
அன்பளிப்பு

84688

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியூர் மக்களுக்கு மட்டும்

எங்களிடமிருந்து
25 சினிமா பாடல் புத்தகங்களை பெறுவதற்கு
ரூபா பெறுமதியான முத்திரைகள் மட்டும்
அனுப்புங்கள்
உடன் தபாலில் அனுப்புகிறோம்.




தேனிசை மழை மாத இதழ்
புதிய பாடல்கள் நிலை
தனிப்பிரதி : 4-00
டேவிட்
38, வேம்படி ... யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org